M மதுரை மாவட்டம்

**இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2018**

**வகுப்பு - 12** பதிவு எண் [ ]

நேரம்: 1.15 மணி **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள்: 45

பகுதி - அ

**கொடுக்கப்பட்ட மூன்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்: 10×1=10**

1) இந்திய கூட்டாண்மைச் சட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு ...........
   அ) 1932 ஆ) 1956 இ) 1923
2) நற்பெயர் ஒரு ........... சொத்து.
   அ) நிலை ஆ) புலனாகும் இ) புலனாகா
3) கூட்டாண்மையில் ஈடுபடும் நபர்களை ஒட்டு மொத்தமாக .......... என அழைக்கலாம்.
   அ) கூட்டாளி ஆ) நிறுவனம் இ) நிறுவனப்பெயர்
4) நிலை முதல் முறையில், கூட்டாளிகளின் இலாப-நட்டங்கள் அவர்களின் ........... கணக்குகளுக்கு மாற்றப்படுகிறது.
   அ) நடப்பு ஆ) எடுப்பு இ) முதல்
5) ஒரு சொத்து மதிப்பு அதிகரிக்கும்பொழுது, அது ........... இனமாகும்.
   அ) இலாப ஆ) நட்ட இ) பொறுப்பு
6) பகிர்ந்து தரா இலாபம் இருப்புநிலைக்குறிப்பின் ............ பக்கத்தில் தோன்றும்.
   அ) சொத்துக்கள் ஆ) பொறுப்புகள் இ) இரண்டும்
7) கூட்டாளி சேர்க்கையின் பொழுது, நற்பெயர் தோற்றுவிக்கப்படுகையில் பற்று செய்யப்படும் கணக்கு
   அ) கூட்டாளிகளின் முதல் கணக்குகள் ஆ) நற்பெயர் கணக்கு
   இ) மறுமதிப்பீடு கணக்கு.
8) புதிய இலாபப்பகிர்வு விகிதத்திலிருந்து பழைய இலாபப் பங்கு விகிதத்தைக் கழித்தால் கிடைப்பது ............ விகிதம் ஆகும்.
   அ) ஆதாயம் ஆ) முதல் இ) தியாகம்
9) A, B, C ஆகிய கூட்டாளிகளின் இலாபப்பங்கு முறையே 1/5, 1/3, 1/10 ஆகும். B கூட்டாண்மையிலிருந்து விலகினால், புதிய இலாபப் பகிர்வு விகிதம் ............
   அ) 3 : 1 ஆ) 2 : 1 இ) 1 : 2
10) வெளிச்செல்லும் கூட்டாளிக்கு சேர வேண்டிய தொகை உடனே செலுத்தப்படவில்லை எனில், அத்தொகை மாற்றப்படும் கணக்கு
   அ) முதல் கணக்கு ஆ) கடன் கணக்கு இ) ரொக்க கணக்கு

பகுதி - ஆ

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்: 4×2=8**
**அவற்றுள் வினா எண் 11க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.**

11) நற்பெயர் என்றால் என்ன?
12) உயர் லாபம் என்றால் என்ன?
13) மறுமதிப்பீட்டுக் கணக்கு என்றால் என்ன?
14) 1.4.2004 அன்று A என்பவர் ரூ. 60,000 முதலிட்டு தொழில் தொடங்கினார். 1.7.2004 அன்று ரூ. 8,000 முதலிலிருந்து திரும்ப எடுத்துக்கொண்டார். 2005, மார்ச் 31 ஆம் நாளுடன் முடியும் ஆண்டின் முதல் மீது வட்டி 5% கணக்கிடுக.
15) ஷீலா, நீலா என்ற கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். கமலா என்பவரை 1/5 கூட்டுக்குச் சேர்த்தனர். அவர்களுடைய புதிய இலாபப்பகிர்வு விகிதத்தைக் கணக்கிடுக.

16) A, B, C என்ற கூட்டாளிகளின் 4:3:2 எனும் விகிதத்தில் இலாப-நட்டம் பகிர்ந்து வந்தனர். 2005, மார்ச் 31 அன்று நிறுவன ஏடுகளில் பொதுக்காப்பு ரூ. 45,000 ஆக இருந்தது. C 1.4.05 அன்று விலக விரும்பினார். பொதுக்காப்பை கூட்டாளிகளின் முதல் கணக்குகளுக்கு மாற்றுவதற்கான குறிப்பேட்டுப் பதிவு தருக.

## பகுதி - இ

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்: 4×3=12**
**அவற்றுள் வினா எண் 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

17) ஹரீஷ் மற்றும் சுதர்ஷன் ஆகிய இரு கூட்டாளிகளின் சமமாக இலாப-நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். ஹரீஷ் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூ. 400 தொடர்ந்து எடுத்துக் கொள்கிறார். சுதர்ஷன் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் ரூ. 800 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீதான வட்டி ஓர் ஆண்டிற்கு 5% என கணக்கிடுக.

18) நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்று தருக.

19) தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்குமிடையே உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்று தருக.

20) கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு நற்பெயர் கணக்கிடப்படுகிறது. நான்கு ஆண்டுகளின் இலாப-நட்டங்கள் பின்வருமாறு.

| | | ரூ. |
|---|---|---|
| 1996 | இலாபம் | 20,000 |
| 1997 | இலாபம் | 30,000 |
| 1998 | நட்டம் | 6,000 |
| 1999 | இலாபம் | 16,000 |

21) காயத்ரி, சுமித்ரா என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர். 31.12.2002 அன்று நிறுவனத்தின் ஏடுகள் பொதுக்காப்பு ரூ. 50,000 ஆகவும் இலாப-நட்டக் கணக்கு பற்று இருப்பாக ரூ. 30,000மும் காட்டுகின்றன. பவித்ரா என்பவரை கூட்டாண்மையில் சேர்ப்பதென முடிவு எடுத்தனர். குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

22) சங்கர், சேகர், சாரதி என்ற கூட்டாளிகள் 3:2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். பின்வரும் நிறுவனச் சொத்துக்கள், பொறுப்புகள் மறுமதிப்பீடுக்குட்பட்டு சாரதி என்பவர் விலக முடிவெடுத்தார்.
அ) கட்டடட மதிப்பு ரூ. 33,000 மதிப்பேற்றம் செய்வது.
ஆ) பதிவு பெறாமலிருந்த முதலீடுகள் ரூ. 6,000 கணக்கில் கொண்டு வருவது.
இ) சரக்கிருப்பு மீது ரூ. 3,000, அறைகலன் மீது ரூ. 1,500 தேய்மானம் நீக்குவது.
ஈ) பற்பல கடனாளர் ரூ. 1,500 போக்கெழுதுவது.
மறுமதிப்பீட்டுக் கணக்கு தயார் செய்யவும்.

## பகுதி - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 3×5=15**

23) அ) கீழ்காணும் விவரங்களைக் கொண்டு ரவி, ராஜா எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை மாறுபடும் முதல் முறையில் தயாரிக்க.

| விவரம் | ரவி | ராஜா |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1.1.2001 அன்றைய முதல் | 80,000 | 50,000 |
| 2001ம் ஆண்டின் எடுப்புகள் | 6,000 | 4,000 |
| முதல் மீது வட்டி 6% | ? | ? |

| விவரம் | ரவி ரூ. | ராஜா ரூ. |
|---|---|---|
| எடுப்பு மீது வட்டி 5% | ? | ? |
| இலாபப் பங்கு | 8,000 | 6,000 |
| ஊதியம் | - | 2,000 |
| கழிவு | 1,600 | 1,200 |
| இராஜாவின் கடன் மீது வட்டி | - | 3,000 |

**(அல்லது)**

ஆ) பல்லவன், பாண்டியன், சோழன் என்ற கூட்டாளிகள் முறையே 3:2:1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து தொழில்புரிந்து வந்தனர். 2005, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

**இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| கடனீந்தோர் | | 30,000 | வங்கி | 65,000 |
| பொதுக்காப்பு | | 15,000 | கடனாளிகள் | 40,000 |
| முதல்: | | | சரக்கிருப்பு | 80,000 |
| பல்லவன் | 2,00,000 | | கட்டடம் | 2,50,000 |
| பாண்டியன் | 1,20,000 | | இலாப-நட்ட க/கு | 30,000 |
| சோழன் | 1,00,000 | 4,20,000 | | |
| | | 4,65,000 | | 4,65,000 |

பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சோழன் என்பவர் 2005, ஏப்ரல் 1 அன்று விலகினார்.

அ) நற்பெயர் ரூ. 18,000 என மதிப்பிடுவது.

ஆ) சோழன் என்பவருக்குச் சேர வேண்டிய தொகையில் ரூ. 50,000 உடனடியாகவும், மீதித்தொகை அவரின் கடன் கணக்குக்கும் மாற்றப்பட்டது.

இ) மறுமதிப்பீட்டு இலாபம்:

| | | ரூ. |
|---|---|---|
| பல்லவன் | - | 6,300 |
| பாண்டியன் | - | 4,200 |
| சோழன் | - | 2,100 |

கூட்டாளியின் முதல் கணக்குகளை தயார் செய்க.

24) அ) அமுதன், இராமன் எனும் கூட்டாளிகள் 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். 1.4.2003 அன்றைய அவர்களுடைய முதல் முறையே ரூ. 1,60,000, ரூ. 1,20,000 ஆகும். கூட்டாண்மை ஒப்பாவணம் கீழ்க்காண்பனவற்றிற்கு வகை செய்கிறது. சரிக்கட்டுதல்களுக்கு முன் 2004 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ. 60,000. அந்த ஆண்டின் எடுப்புகள் முறையே அமுதன் ரூ. 12,000, இராமன் ரூ. 8,000 ஆகும்.

1. முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5%.
2. எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 6% (அமுதன் ரூ. 360, இராமன் ரூ. 240)
3. அமுதன், இராமன் இருவரும் முறையே ஆண்டுக்கு ரூ. 10,000 ஊதியம் பெறுகின்றனர்.

இலாப-நட்ட பகிர்வு கணக்கை தயார் செய்க.

**(அல்லது)**

ஆ) ஒரு நிறுவனம் கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு நிகர இலாபங்களை ஈட்டியுள்ளது.

| | ரூ. |
|---|---|
| முதல் ஆண்டு | 36,000 |
| இரண்டாம் ஆண்டு | 40,000 |
| மூன்றாம் ஆண்டு | 44,000 |

நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட முதல் ரூ. 1,20,000. நியாயமான முதல் மீதான வருமானம் 10% உயர் இலாபத்தின் மூன்று ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு நற்பெயரைக் கணக்கிடுக.

25) அ) அனிதா, வனிதா என்ற கூட்டாளிகள் முறையே 3:1 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வருகின்றனர். 2005, மார்ச் 31ம் நாளன்றைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 60,000 | ரொக்கம் | 5,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 20,000 | கடனாளிகள் | 70,000 |
| பொதுக்காப்பு | 40,000 | சரக்கிருப்பு | 30,000 |
| முதல்: | | பொறியும், பொறித்தொகுதியும் | 25,000 |
| அனிதா 80,000 | | கட்டடம் | 1,00,000 |
| வனிதா 40,000 | 1,20,000 | இலாப-நட்டக் க/கு | 10,000 |
| | 2,40,000 | | 2,40,000 |

2005 ஏப்ரல் 1 ஆம் நாள் கவிதா என்பவரை 1/5 பங்குக்கு சேர்த்துக் கொள்வதெனவும் கீழ்க்கண்ட சரிக்கட்டுகளுக்கும் சம்மதித்தனர்.

அ) கட்டடத்தை ரூ. 1,20,000 என மறுமதிப்பீடு செய்வது.

ஆ) சரக்கிருப்பு ரூ. 21,500 என மதிப்பீடு செய்வது.

இ) நற்பெயர் ரூ. 40,000 என தோற்றுவிப்பது.

ஈ) வாராஐயக்கடன் ஒதுக்கு 5%.

உ) கவிதா ரூ. 50,000 முதல் கொண்டு வருவது.

ஊ) 2005 ஏப்ரல் 1ம் நாளன்றைய கூட்டாளிகள்.

முதல்:

அனிதா 1,38,500

வனிதா 59,500

கவிதா 50,000

ரொக்கக் கணக்கு மற்றும் மாற்றியமைக்கப்பட்ட நிறுவனத்தின் இருப்புநிலைக்குறிப்பை தயாரிக்க.

**(அல்லது)**

ஆ) கலாவதி, மாலதி என்ற கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகி[illegible] பகிர்ந்து வந்தனர். லீலாவதி என்பவரை 1/3 கூட்டுக்குச் சேர்த்துக் கொண்டனர். நற்பெயர் மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு மதிப்பிடப்பட்டது. மூன்று அண்டுகளின் இலாபங்கள் முறையே ரூ. 44,000, ரூ. 56,000, ரூ. 68,000 ஆகும். கீழ்க்காணும் தருணங்களில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

அ) நற்பெயர் இதுவரை ஏடுகளில் இல்லாமலிருந்தால்.

ஆ) ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ரூ. 28,000 எனக் காட்டப்பட்டிருந்தால்.

இ) ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ரூ. 1,68,000 எனக் காட்டப்பட்டிருந்தால்.

---------